**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஶ்ரீ சோபகிருது வருடம் சித்திரைத் திங்கள் 08 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.450/2022-ல்**

**அசல் வழக்கு எண்.03/2021**

1. ரவிச்சந்திரன்

2. ராமச்சந்திரன் .... மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர்//**

1. கோச்மேன்

2. பாலையன்

3. சார்பதிவாளர், உள்ளிக்கோட்டை,

4. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர்,
திருவாரூர். .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 17.11.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு (24.03.2023) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. G.ஜீவானந்தம்** அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், 3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கறிஞர் **திரு. V. சச்சிதானந்தம்** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று(21.04.2023) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, கடந்த 27.10.2022 ம் தேதியில் தவறுகைக்காக தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கை கோப்பில் எடுத்து வழக்கை நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி உ.ந.ச.கட்டளை 9 விதி9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u> :-

அசல் வழக்கில் 27.10.2022 ம்தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் ஆஜராகாததால் தவறுகை காரணமாக 27.10.2022 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கை கோப்பில் எடுக்கவேண்டும் கூறப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழியான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. அதில் மேற்படி மனுதாரர்கள் வேண்டுமென்றே எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பல செயல்களை செய்து வருவதாகவும், வழக்கினை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திலேயே இவ்வாறு தோன்றாத்தரப்பினராக இருந்து வந்ததாகவும் எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

4. இ ரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

5. **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்கையில்....

இந்நீதிமன்றத்தில் கடந்த 27.10.2022 ம் தேதியன்று விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டு முன்னிலையாகாததால் பட்டியலில் போடப்பட்டு வாதிகளை முன்னிலையாக உத்தரவிட்டிருந்தநிலையில், மேற்படி உத்தரவை மதிக்காமல் மேற்படி வாதிகள் நீதிமன்றத்திற்கு வராததால் மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது மேற்படி ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

எந்த ஒரு வழக்காக இருந்தாலும் இருபுறமும் அவர்களது தரப்பு நியாயங்களை

சாட்சியங்களாக பதிவு செய்து தீர்மானம் செய்யாதபட்சத்தில் மேற்படி தீர்வானது ஒரு முழுமையான தீர்வாக இருக்காது என்பதை கருத்திற்கொண்டும்நீதியின் நலன் கருதியும் வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மேற்படி அசல் வழக்கான 03/2021-ல் ஏற்பட்ட தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து இம்மனுவினை அனுமதித்து மேற்படி வழக்கு கோப்பை மீண்டும் எடுக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வுக்காண்கிறது.

மேலும், இம்மனுவினை அனுமதிப்பதால் மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித கஷ்ட, நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

**முடிவில், இம்மனுவானது கடந்த 27.10.2022 ம் தேதியன்று வாதிகளின் வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேற்படி வழக்கை மேல் நடத்திட அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

**மனுதாரர்கள்/ வாதிகள், இம்மனுவின் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ இவ்வுத்தரவு தேதியிலிருந்து 1 மாத காலத்திற்குள் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (21.04.2023)அவையறியப்பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.(மு.கூ.பொ)